செ.வெ.எண்: 870 நாள்: 29.12.2019

**இரண்டாம் கட்ட ஊரக ஊள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ள வாக்குச்சாவடி மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.**

---

இரண்டாம் கட்ட ஊரக உள்ளாட்சி தேர்தல் நாளை நடைபெற உள்ளதையொட்டி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.12.2019) நேரில் ஆய்வு செய்தார். இதன்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் இரண்டாம்கட்ட ஊரக உள்ளாட்சி தேர்தலானது நாளை 30.12.2019 நடத்தப்பட உள்ளது. அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக அறந்தாங்கி, அரிமளம், ஆவுடையார்கோவில், பொன்னமராவதி, மணமேல்குடி, திருமயம், திருவரங்குளம் ஆகிய 7 ஊராட்சி ஒன்றியங்களில் ஆண் வாக்காளர்கள் 2,87,181 பெண் வாக்காளர்கள் 2,90,851 இதரர் 12 என ஆக மொத்தம் 5,78,044 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இரண்டாம்கட்ட வாக்குப்பதிவில் 2,468 பதவியிடங்களுக்கு 5,754 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். தேர்தலை அமைதியான முறையில் நடைபெற தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளும் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்றைய ஆய்வின் போது திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து அதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு வாக்குப்பதிவிற்கு தேவையான படிவங்கள், விரல் அடையாள மை, சீல் வைப்பதற்கான அரக்குகள் உள்ளிட்ட 22 வகையான பொருட்கள் வாக்குப்பதிவு மையங்களுக்கு அனுப்பி வைக்கும் பணி ஆய்வு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து வாக்கு எண்ணும் மையங்களான திருவரங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் பாரதி கல்வியியல் கல்லூரியிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக இந்த ஆய்வின் போது அங்கு வருகை புரிந்திருந்த வாக்குச்சாவடி அலுவலர்களான ஆசிரியர்களிடம் தங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் முறையாக அமைக்கப்பட்டுள்ளனவா என மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டறிந்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**